இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 06
LWU 4311/4321 – சட்டவியல்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 28.04.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

நான்கு வினாக்களுக்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. ஏறக்குறைய 2500 வருடங்கள் வரலாற்றில் இயற்கை சட்டம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு பல்வேறுபட்ட விடைகள் வழங்கப்பட்டமையானது ஆச்சரியப்பட வேண்டியதொன்றல்ல. "இயற்கை சட்டம்" என்ற வெளிப்பாடு தொடர்ச்சியாக இருந்து வருகிறது, இதன் கருத்து, இக்கோட்பாடு நிலையான ஒன்று என்பதை குறிக்கவில்லை. இதற்கு மிக வித்தியாசமான கருத்துக்கள் இருந்ததோடு இது முற்றிலும் வேறுபட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. D' Entreves குறித்து காட்டுவது போல, " இயற்கை சட்ட எண்ணக்கருவின் அதிகமான தெளிவின்மைகளுக்கு அந்த எண்ணக்கருவின் இயல்பில் காணப்படுகின்ற தெளிவின்மைகளில் இருந்தே காரணம் காட்டப்படல் வேண்டும்".

   மேலே தெரிவிக்கப்பட்ட கொள்கைகளுடன் தொடர்புறுத்தி இயற்கை சட்ட கொள்கையின் பரிணாம வளரச்சி மீது குறிப்பு ஒன்றை எழுதுக.

   இக் கொள்கையின் உள்ளடக்கத்தில் பல்வேறுபட்ட காலப்பகுதிகளில் கைகொள்ளப்பட்ட வேறுபட்ட எண்ணக்கருக்களின் பலம், பலவீனங்களை உமது விடையில் எடுத்துக்காட்ட வேண்டும்.

2. "தெய்வீக சட்டங்களுடன் முரண் படுகின்ற மானுட சட்டங்கள் பிணிக்கப்பட்டாதவை. அதாவது அவை சட்டங்கள் அல்ல, அவை முழுமையாக அர்த்தமற்ற விடயங்களை பற்றி கதைக்கின்றன. அனேகமான கடும் உறுத்தம் கொண்ட சட்டங்கள், அதாவது இவை கடவுளுடைய விருப்பத்துக்கு எதிராக இருந்தமையால் அவை தொடரச்சியாக, நீதி முறை நியாய சபைகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. ஒரு செயல், அப்பாவித்தன்மை அல்லது சாதகமான நன்மையை தரக்கூடிய ஒன்று என எண்ணினால் அச்செயல் ஆனது இறைமையின கீழ் வழங்கப்படும் மரண தண்டனையில் இருந்து தடுக்கப்படல் வேண்டும்; நான் இச்செயலை செய்தால் நன்கு விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படல் வேண்டும், அத்துடன் தெய்வீக சட்டத்திற்கு எதிரானது என்ற அடிப்படையில் நான் அத்தண்டனையை எதிர்த்தால் மானிட சட்டங்களை கட்டளை இடுபவர்கள் தீய விளைவுகளை தராத செயல்களை தடுத்தல் கூடாது, எச் சட்டத்தின் வலிதான தன்மையை நான் மீறி இருக்கின்றேனோ அச்சட்டத்தின் கீழ் என்னுடைய நியாய தன்மை நிருபிக்கப்பட்டு தண்டிக்கப்படல் வேண்டும".

   மேலே தரப்பட்ட கருத்துக்களில் இருக்கின்ற சட்டவியல் கொள்கையை விமர்சித்து மதிப்பிடுக. உமது கருத்துகளை ஆதாரப்படுத்துவதற்கு இலங்கையின் சட்ட முறைமையின் கீழ் உள்ள எடுத்துக்காட்டுகளை குறிப்பிடல் வேண்டும். என நீர் எதிர்பார்க்கப்படுகிறீர்.

3. "வரலாற்றுசார் கொள்கை சட்டரீதியாக இருள் சூழ் மாயை உடைய ஒரு கொள்கை என குற்றஞ்சாட்டப்படுகிறது. நியாயவாதிகள் எதிர் காலத்தை வடிவமைப்பதில் தவறு காண்கிற வேளையில் வரலாற்றுசார் கொள்கைவாதிகள் கடந்த கால வடிவமைப்பிலே தவறுகளை காண்கிறார்கள். அவர்கள், காலத்திற்கேற்ப மாறுபடும் தடங்கல்களை விரும்பும் பாரம்பரியங்கள் ஊடாக சீர்திருத்த முயற்சியில் ஈடுபடுகிறார்கள். சட்டவாக்கம் மீது இருக்கும் அவர்களுடைய அவநம்பிக்கையானது, குறிப்பாக சட்டவாக்கங்களை கோவைப்படுத்துகின்ற போது விருப்பத்திற்கு மாறாகவும் சூழவுள்ள முதன்மையான நிகழ்வுகள் தொடர்பான மனித முயற்சிகளின் வினைத்திறனில் நம்பிக்கயைற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை காட்டுகிறது".

மேலே கூறப்பட்ட கருத்து சட்டவியலின் வரலாற்று கொள்கை கற்பித்தலிற்கு எதிராக காணப்படும் ஒரு நியாயமான விமர்சனமாக இருக்கும் என நீர் கருதுகிறீரா? உமது விடைக்குரிய காரணங்களை தருக.

4. ஹேபர்ட் ஸ்பென்சர், எடெம் ஸ்மித் ஆகியோருடைய கருத்தின்படி, மனித செயற்பாடுகள்(Human initiatives) சட்டத்தின் தலையீட்டுடன்னான பொருளாதார வளப்பங்கீடு மற்றும் சமூகநீதியை நடைமுறைப்படுத்துதல் அல்லது தனிப்பட்டவர்களுக்கு செயற்பாடுகளை ஒதுக்கி கொடுத்தல் ஆகியவற்றின் மூலமாக அபிவிருத்தி செய்யப்பட முடியாது. அவர்கள் கூறுவது போல அத்தகைய அனைத்து மட்டுப்பாடுகளையும் நீக்குவதன் மூலமாகவே தனிப்பட்ட செயற்பாட்டை அபிவிருத்தி செய்ய முடியும். மறு புறத்தில் மனித செயற்பாடு என்பது அபிவிருத்தியின் அடிப்படை அம்சம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் இந்த மனித செயற்பாடானது எப்போதும் மனித பேராசை, அபிவிருத்தி குறிக்கோள் என்பவற்றுடன் சேர்ந்தே காணப்படுகிறது. அத்துடன் மனித செயற்பாடுகள், அபிவிருத்திக்கான வாய்ப்புகளில் காணப்படுகின்ற சமத்துவம் இன்மை என்பதனால் அழுக்கடைந்துள்ளது. ஜேரின், பவுண்ட் ஆகிய இருவரும் சமூக அக்கறை பொறிமுறை கட்டமைப்பு என்பதை எடுத்துக்காட்டுகிறார்கள். சமூக வியல் சார் கொள்கை சட்டத்திற்கு ஆக்ககுறைந்த பங்களிப்பை செய்கின்ற அதே வேளை, பாதுகாப்பானதும் சமத்துவமான சூழலை உருவாக்குகின்ற போது சட்டத்தின் செயற்பாடானது ஆகக் குறைந்த அளவை விட மேலதிகமாக செயற்படுகின்றதென வாதிட முடியும். இந்த நடவடிக்கையில் ஏற்படுகின்ற முறையற்ற நன்மை, நியாயமற்ற நடைமுறைகள் ஆகியவற்றை கட்டுப்படுத்துதலும் அதனை தடுத்தலும் பிரதான விடயமாகும்.

இலங்கையின் சட்டவாக்க நடைமுறைகளுக்கு விசேட கவனம் கொடுத்து கருத்துரை செய்க.

5. அமெரிக்க மெய்யியல் வாதத்தின் முதன்மை போக்கு சட்டத்தின் நிச்சயத்தன்மையை கேள்விக்குட்படுத்துவதன் மூலம் கருத்தேற்புவியல் என்பதற்கு தாக்குதலை ஏற்படுத்துவதும் ஆகும். அத்துடன் " வழக்காடல்களின் விபத்து" (Accidents of litigation) என்பதை தோற்றுவிக்கின்ற பல்வேறு தலையீடுகளை சட்டமுறையின் பல்வேறுபட்ட கூறுகள் மற்றும் நீதியியல் தொழில் நுட்பம் ஊடாக உறுதிப்படுத்துவதும் ஆகும்.

அமெரிக்க மெய்யியல் வாதத்தின் கொள்கைசார் அடிப்படைகளை குறிப்பிட்டு இக் கொள்கை இலங்கையின் உண்மையான சட்டமுறைமையின் தோற்றப்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கு எந்தளவு தூரம் அகக்காட்சிகளை வழங்குகிறது என விளக்குக.

6. ஸ்கன்டிநேவிய மெய்யியல் வாதிகள் சிலர் அனைத்து சட்ட தோற்றப்பாடுகளையும் "அபௌதீகம்" (metaphysics) என்பதில் இருந்து வேறு படுத்துவதற்கு மிகவும் முதன்மை இடத்தை கொடுப்பதுடன் சில சட்டவாளர்கள் ஸ்கன்டிநேவிய மெய்யியல் வாதத்தை 'அபௌதீக-வெறுப்பாளர்கள்' (metaphysics-sceptical) என விளக்குகிறார்கள். சில ஸ்கன்டிநேவிய கொள்கை வாதிளுக்கமைய சட்ட தோற்றப்பாடுகளில் பெரும்பாலானவை புராதன வித்தை(primitive magic) என்பதில் இருந்து தோன்றியுள்ளது என கருதுகிறார்கள்.

ஆராய்க.

7. (அ) சமுதாயம் ஒன்றினுடைய சட்டமுறைமையை கெல்சன் எவ்வாறு வருணிக்கிறார்?

(5 புள்ளிகள்)

(ஆ) 'அடிப்படை நியமம்' (Grundnorn) என்ற பதத்தினால் செல்சன் எதனை குறிப்பிடுகிறார். என்பதை விளக்கி அடிப்படை நியமம் ஒன்றினுடைய வலிதானதன்மை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை விளக்குக.

(7 புள்ளிகள்)

இ) புரட்சி ஒன்றினை அடுத்து, ஏற்படுகின்ற சட்ட மற்றும் அரசியல் கட்டளைகள் ஆகியவற்றிற்கு இடையிலே தோன்றும் முரண்பாடுகளை தீர்த்து வைப்பதற்கு சிறந்த வழிகாட்டல் ஒன்றை செல்சன் கோட்பாட்டினுடைய சட்ட வலிதான தன்மை வழங்குகின்றது என ஏன் கூறப்படுகிறது?

(13 புள்ளிகள்)

8. மாக்ஸிய கொள்கைக்கு அமைய சட்டகொள்கைகள 'நித்திய வகைப்பாடுகள்' (eternal categories) 'நீதியின் உள்ளார்ந்த கருத்துக்கள்' (innate ideas of justice) அல்லது 'பிரித்தறிய முடியாத உரிமைகள்' பற்றிய கருத்தேற்பு என்ற வகையில் அழைக்கப்படுகிறது. அடையாளங் காணக்கூடிய எமது சமூக அஸ்திவாரத்தின் மேல்தளமானது, ஒரு சில வகையான பொருளாதார உற்பத்தியின் அடித்தளம் மீது கட்டப்பட்டுள்ளது என்பதும் அங்கு வர்க்க வேறுபாடுகள் ஒடுக்குமுறைகள் போன்றவற்றின் பண்புகளைக் கொண்ட சமூகத்தின் எதிர்ப்புகள் காணப்படுகின்றது என்பதையும் பிரதிபலிக்கின்றது.

இந்த மாக்ஸிய கொள்கை இலங்கை சட்ட இயல்பின் உண்மையான தோற்றப்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்துகின்றதா. உமது விடைக்குரிய காரணங்களை தருக.

(பதிப்புரிமைபெற்றது)